# <u>செய்தி வெளியீடு 337 17.04.2010</u>

**தமிழ்நாடு சிமெண்ட் ஆலைக்கு சொந்தமான 1600 ஏக்கர் தரிசு நிலத்தில் கூழ்மரசாகுபடி. மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம்.**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் கூழ்மரங்கள் தொடர்ச்சியாக கிடைக்கும் பொருட்டு பண்ணைக்காடுகள் மற்றும் மூலதனக்காடுகள் என்ற இரண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த இரண்டு திட்டங்களின் மூலம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இதுவரை தமிழகத்தின் 28 மாவட்டங்களில் உள்ள 10,008 விவசாயிகளுடன் இணைந்து 51,220 ஏக்கர் பரப்பளவில் கூழ்மரங்களை பயிரிட்டுள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆண்டொன்றுக்கு மேலும் 15,000 ஏக்கர் நிலப்பரப்பில் கூழ்மர தோட்டங்களை உருவாக்கி ஒரு லட்சம் ஏக்கர் என்ற இலக்கை அடைய முனைந்து செயல்பட்டு வருகிறது.

மானாவாரி தரிசு நிலங்களில் கூழ்மர வளர்ப்பு ஊக்குவிக்கப்படுவதால் இத்திட்டம் விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இந்நிறுவனம் தரமான விதைநாற்றுகள் மற்றும் விதையில்லா வீரிய நாற்றுகளை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குகிறது. மேலும், இந்நிறுவனம் முதிர்ந்த கூழ்மரங்களை அறுவடையின் போது உள்ள சந்தைவிலை அல்லது குறைந்த பட்ச ஆதாரவிலை, இவை இரண்டில் எது அதிகமோ அந்த விலையை கொடுக்கும் உத்திரவாதத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறது. இத்திட்டத்தில் தரிசு நிலங்களில் கூழ்மரங்களை வளர்ப்பதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது.

சிமெண்ட் மற்றும் அதை சார்ந்த பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (TANCEM), சுண்ணாம்புக் கல் தேவைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களில் சுமார் 1600 ஏக்கர் தரிசு நிலங்கள் உடனடி உபயோகத்திற்கு தேவைப்படாமல் உள்ளன. இந்த நிலங்கள் தேவைக்கு தகுந்தாற்போல் படிப்படியாக உபயோகப்படுத்தப்படும்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனமும், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனமும் இணைந்து மாண்புமிகு தமிழக துணை முதல்வர் முன்னிலையில் 17.4.2010 அன்று இந்த பயன்படுத்தாத தரிசு நிலங்களில் கூழ்மரங்களை 12 ஆண்டுகளில் சாகுபடி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துக் கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சொந்த செலவில் கூழ்மரங்களை வளர்த்து அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் 30 சதவீத பங்கை தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு அளிக்கும். இந்த தரிசு நிலங்களில் இடைப்பட்ட காலத்தில் கூழ்மரங்களை வளர்ப்பதன் மூலம் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் சுமார் ரூபாய் 9.25 கோடியை ஒப்பந்த காலத்தில் அதன் பங்காக பெறும்.

இந்த திட்டத்தின் மூலம், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மானாவாரி நிலங்களை இடைப்பட்ட காலங்களில் வருவாய் ஈட்டும் வகையில் பயன்படுத்தும். மேலும், இந்த திட்டம் பசுமைப்பரப்பை அதிகரிப்பதுடன் அப்பகுதியின் சுற்றுச்சூழலையும் மேம்படுத்தும். தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இந்த நிலங்களில் மரவளர்ப்பு பணிகளை மேற்கொள்வதன் மூலம் அந்த பகுதிகளில் உள்ள கிராம மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பை அளிக்கும். இந்த திட்டத்தின் மூலம் ஒப்பந்த காலத்திற்குள் கிடைக்கும் சுமார் 96,000 மெ.டன் தரமான கூழ்மரங்களினால் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் பயன்பெறும். இதன் மூலம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மற்றும் பொதுமக்கள் பயன்பெறுவதுடன், பசுமைப்பரப்பு அதிகரிப்பதால் சுற்றுச்சூழலும் மேம்படும்.

இந்தத் திட்டம் பொருளாதார ரீதியில் லாபகரமாகவும் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் சமூகத்திற்கும் பயனுடையதாகவும் அமையும்.

இன்று (17.04.2010) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.இராஜிவ் ரஞ்சன், இ.ஆ.ப., முன்னிலையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.முகமது நசிமுதீன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர்.மணிவாசன், இ.ஆ.ப., ஆகியேயர் கையெழுத்திட்டனர்.

*********

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (17.04.2010) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு சிமெண்ட் ஆலைக்கு சொந்தமான 1600 ஏக்கர் தரிசு நிலத்தில் கூழ்மரச் சாகுபடி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.முகமது நசிமுதீன், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர். மணிவாசன், இ.ஆ.ப., ஆகியோர் கையெழுத்திட்டனர். உடன் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.இராஜிவ் ரஞ்சன், இ.ஆ.ப., உள்ளார்.